*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 102/2019***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-4 (LW-5)***

*Name / Father's Name:* ***திரு. சிவ அங்கமுத்து த/பெ. சிவலிங்கம்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **07.08.2026.**

துவக்க நேரம் 03.49 A.N

**எதிரி (உமாமகேஷ்வரி) ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது மல்லியகரையில் குடியிருந்து ஊட்டி மெடிகல் காலேஜ்-ல் மெடிக்கல் ரெக்கார்டு டெக்னிசியனாக பணிபுரிந்து வருகிறேன். சேலம் இணை இயக்குநர் அலுவலகத்திலிருந்து கருமந்துறையில் உள்ள கிளாக்காடு ரோட்டில் க.எண்.19/36 என்ற விலாசத்தில் போலிமருத்துவம் பார்ப்பதாகவும், அதை ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்யவும் சொல்லி கெங்கவல்லி தலைமை மருத்துவர் திருமதி.தங்கத்தாய் என்பவருக்கும், பெத்தநாயக்கம் பாளையம் மருத்துவர் திருமதி.ஜெயசெல்விக்கும் தகவல் எழுத்து மூலமாக கொடுக்கப்பட்டது.

2) அவ்வாறு கொடுக்கப்பட்ட தகவலின் பேரில் கெங்கவல்லி தலைமை மருத்துவர் திருமதி.தங்கத்தாய், பெத்தநாயக்கம் பாளையம் தலைமை மருத்துவர் திருமதி.ஜெயசெல்வி, கெங்கவல்லி அரசு மருத்துவமனை மருந்தாளுனர் திருமதி.தில்சாத்பேகம் மற்றும் கடந்த 22.01.2019ம் வருடம் மேற்சொன்ன முகவரியில் உள்ள இடத்திற்கு சென்று ஆய்வு செய்தோம்.

3) அவ்வாறு ஆய்வு செய்ததில் அந்த இடத்தில் இருந்த உமாமகேஷ்வரி என்பவர் அங்கு 26 வகையான மருந்துகள் மற்றும் மருத்துவ

உபகரணங்களை வைத்திருந்தார். மேலும் அந்த் இடத்தில் இரண்டு மூன்று நபர்கள் ஆஜரில் இருந்தனர். அவர்களிடம் எதற்காக இங்கு வந்திருக்கிறீர்கள் என்று கேட்டதற்கு உடம்பு சரியில்லை என்றும், மருத்துவம் பார்ப்பதற்காக வந்திருப்பதாக எங்களிடம் சொன்னார்கள்.

4) மேற்படி சம்பவம் குறித்து எதிரியிடம் கேட்டதற்கு நான் மருத்துவம் பார்க்கவில்லை என்று சொன்னார். பின்பு பெத்தநாயக்கன் பாளையம் தலைமை மருத்துவர் திருமதி.ஜெயசெல்வி எதிரி போலி மருத்துவம் பார்த்தது குறித்து கருமந்துறை காவல் நிலையத்தில் அன்றைய தேதியிலேயே புகார் கொடுத்தார். அவ்வாறு புகார் கொடுக்கும்போது நானும் உடன் இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) சம்பவ சமயத்தில் பெத்தநாயக்கம்பாளையம் அரசு மருத்துவமனையில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வந்தேன் என்றால் ஆமாம். கெங்கவல்லி தலைமை மருத்துவரின் தலைமையில் தான் நான் ஆய்வுக்கு சென்றோம் என்றால் ஆமாம்.

2) இந்த சம்மவத்திற்கு முன்பாக கருமந்துறை பகுதியில் போலி மருத்துவம் சம்மந்தமாக மருத்துவருடன் ஆய்விற்கு சென்றுள்ளேனா என்றால் இல்லை. நாங்கள் ஆய்விற்காக கெங்கவல்லியில் ஆஜராகி அதன்பின்பு அங்கிருந்து நேராக கருமந்துறைக்கு சென்றோமா அல்லது பெத்தநாயக்கன் பாளையத்தில் ஒன்றாக ஆஜராகி அங்கிருந்து ஆய்விற்கு கருமந்துறைக்கு சென்றோமா என்றால் கெங்கவல்லியில் இருந்து தலைமை மருத்துவர் திருமதி.தங்கத்தாய் வாடகை காரில் பெத்தநாயக்கன் பாளையத்திற்கு வந்து அங்கிருந்து எங்களை கருமந்துறைக்கு அழைத்துச்சென்றார்.

3) சேலம், இணை இயக்குநர் அலுவலகத்திலிருந்து எங்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் பேரில் தான் நாங்கள் கருமந்துறை பகுதிக்கு போலி மருத்துவம் சம்மந்தமாக ஆய்விற்கு சென்றோமா என்றால் ஆமாம்.

4) சேலம், இணை இயக்குநர் அலுவலகத்திலிருந்து கெங்கவல்லி தலைமை மருத்துவமனைக்கு தான் கருமந்துறையில் போலி மருத்துவம் பார்ப்பது சம்மந்தமாக ஆய்வு செய்ய கடிதம் அனுப்பப்பட்டது என்றால் சரிதான். கெங்கவல்லி தலைமை மருத்துவர் எங்களையும் உட்படுத்தி குழு அமைத்து நாங்கள் கருமந்துறை பகுதியில் மேற்சொன்ன விலாசத்தில் ஆய்வு செய்தோம்.

5) ஆய்விற்காக எத்தனை நபர்கள் சென்றோம் என்றால் நான்கு நபர்கள் சென்றோம். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் ஆமாம். போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். வேறு எங்கும் விசாரிக்கவில்லை.

6) போலீசார் விசாரணையில் சம்பவ இடத்தில் மூன்று நபர்கள் இருந்ததாகவும், அவர்களிடம் மருத்துவர் விசாரித்தாகவும் கூறினேனா என்றால் ஆமாம். போலீசார் விசாரணையில் கூறாமல், வழக்கிற்காக மிகைப்படுத்தி தற்போது நீதிமன்றத்தில் முதல் முறையாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7) சம்பவத்தின் அருகில் நிறைய குடியிருப்புகள், கடைகள் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் ஆய்விற்கு சென்றபோது அருகில் உள்ளவர்கள் அங்கு வந்தார்களா என்றால் ஆமாம். எங்களுடன் ஆய்விற்கு வந்த மருத்துவர் திரி அந்த இடத்தில் போலி மருத்துவம் பார்த்தது குறித்து ஏதேனும் விசாரித்தார்களா என்றால் இல்லை.

8) சம்பவ இடத்திற்கு அருகில் அரை கிலோ மீட்டர் தூரத்தில் அரசு மருத்துவமனை உள்ளதா என்றால் ஆமாம். கருமந்துறை அரசு மருத்துவமனை சம்பவம் நடைபெற்ற அன்று மருத்துவர்கள் மருத்துவம் பார்த்து வந்திருப்பார்களா என்றால் சரிதான்.

9) கருமந்துறை பகுதியில் மருத்துவபடிப்பு படித்து தனியார் மருத்துவமனை வைத்து மருத்துவம் பார்த்து வருகிறார்களா என்றால் அது பற்றி

எனக்கு தெரியாது. நீங்கள் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும் சரியல்ல.

10) சம்பவ இடத்திற்கு அருகில் முன் பகுதியில் எதிரியின் கணவர் கெடிக்கல்ஷாப் வைத்துள்ளாரா என்றால் சரிதான். சம்பவ இடம் நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் மருத்துவ அதிகாரிகள் செல்லவில்லை என்றாலும், அங்கு எந்த பொருள்களையும் நான் பார்க்கவில்லை என்றாலும், சம்பவ இடத்தில் வேறு நபர்களை பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல.

11) சேலம் இணை இயக்குநர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட புகாரின் பேரிலும், வழக்கு பதிவு செய்ய வேண்டிய கட்டாயத்தின் பேரிலும், வேற வழியில் கிடைக்கப்பெற்ற வழக்குச்சொத்தை வைத்து ஒரு பொய்யான புகார் கொடுக்கப்பட்டு அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், எதிரிக்கு இந்த வழக்கிற்கு சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

முடிவு நேரம் 04.30 A.N

C UDAYASUNDARAM
Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.08.07 18:36:56 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 102/2019***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-5 (LW-6)***

*Name / Father's Name:* ***திரு. ராஜேந்திரன் த/பெ. திருப்பதி***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **07.08.2026.**

துவக்க நேரம் 04.31 A.N

**எதிரி (உமாமகேஷ்வரி) ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது கருமந்துறையில் செல்லங்குறிச்சி என்ற கிராமத்தில் விவசாயம் செய்து வருகிறேன். தேதி, மாதம், வருடம் நினைவில்லை. சுமார் 6,7 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் எதிரி உமாமகேஷ்வரி கருமந்துறையில் உள்ள கிளாக்காடு ரோட்டில் மருத்துவம் பார்த்து வந்தார்.

2) ஒரு நாள் காலை 10.00-11.00 மணிக்குள் நான் கிளாக்காடு ரோட்ல் இருந்தேன். அப்போது 3, 4 நபர்கள் அங்கு வந்தார்கள். எதிரி உமாமகேஷ்வரி அவரது வீட்டில் அப்போது மருத்துவம் பார்த்து வந்தார். அப்போது அங்கு வந்த 3 - 4 நபர்கள் நாங்கள் அரசு மருத்துவர்கள் என்றும், ஆய்வு செய்ய வந்திருப்பதாகவும், எதிரி உமாமகேஷ்வரியிடம் சொன்னார்கள்.

3) அப்போது எதிரி மருத்துவம் பார்த்து வந்த இடத்திலிருந்து ஊசி போடுவதற்கான மருத்துவ பொருட்களை எடுத்தார்கள். அப்போது நானும் அங்கு உடன் இருந்தேன். மேற்படி சம்பவம் குறித்து கருமந்துறை காவல் நிலையத்தில் அரசு மருத்துவர்கள் புகார் கொடுத்தார்கள்.

4) வழக்கு சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்பதால் இவ்வழக்கு சம்மந்தமாக சாட்சியம் சொல்ல வரவேண்டுமென்று சொன்னார்கள். நான் அதற்க சரி என்று சொன்னேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில், பிரிவு 254 (3) of BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்து மேற்படி சாட்சியின் குறுக்கு விசாரணையானது வருகின்ற 22.08.2026 ம் தேதியன்று ஒத்திவைக்கப்படுகிறது.**

முடிவு நேரம் 04.45 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.08.07 18:37:04 +0530

Judicial Magistrate No.2, Attur.